முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1564

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.01.2024, புதன்கிழமை

1. பரபிரம்ம பரம ஆனந்த ஞான குருவே
   சரவண சுடர் ஏற்றி
   சகலருக்கும் சற்குருவாய்
   அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 25 ம் நாள், 10.01.2024, புதன்கிழமை)
   வரமாக அரங்கன் உன்னுள் யானிருந்து
   வையகத்தை பாதுகாத்து வருதலுற
3. வருகவே அரங்கன் உன் அவதாரம்
   கலியின் துன்பங்களை நீக்கி அழிவில்லாத ஞானத்தை
   அகிலத்தில் சாமான்யருக்கும் தருவதே
   அவதார நோக்கம் ஆகும்
4. ஆகவே அன்பர்கள் அதை உணர்ந்து தெளிந்து
   அரங்கன் உன் திருபதம் பற்றி இனிதே
   வரமாகத் தருகின்ற தீட்சையை வணங்கி ஏற்றால் போதும்
   வையகத்தில் அவர்கட்கெல்லாம் ஞானபலம் கூடி
5. தன் பிறவிப்பயனை அறிந்து
   தர்மத்தின் வழி உட்கிடந்து
   தவசி உன் ஆற்றலை
   தொண்டின் வழி பேரானந்தகதியாய் பெற்று
6. பெருமைபட உன் தர்மத்தைக் காப்பதாலே
   பேருலகில் அவர்கட்கெல்லாம்
   இனிப்பிறவாத பெரும்பேறு
   உன் கருணையாக கிடைக்க நேரும்

7. நேர்மைகொண்டு அரங்கன் உன் விசுவாசியாக
நிலவுலகில் உன் புகழை எடுத்துச் சொல்லும்
அன்பர்கள் அனைவருமே ஆறுமுகன் என்
ஆசி பெற்றவர்கள் ஆகும்

8. அவர்களுக்கு அரங்கன் வழி யானே
அற்புதமான ஆற்றலும் சக்தியும் காட்சியும் தந்து அருள்புரிவேன்
அன்னதனால் உலகோர் அரங்கன் வழி வந்தால் போதும்
உலகமாற்றத்தை நடத்தி அற்புதம் பெற நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–